1993 ஏப்ரல் 28]

பகுதியிலே விளையும் விளைபொருட்கள்களின் அதிகமான மகசூலைக் கொண்டு, அதிகமாக மகசூல் செய்யும் விவசாயிகளுக்குப் பரிசாக விவசாயிகளின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு கல்லூரிகளில் சேர்ப்பதற்கு அரசு வாய்ப்பு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்திலே மாணவர்களைச் சேர்க்கின்றபோது, அவர்கள் நுழைவுத் தேர்வு எழுதி, அந்த நுழைவுத் தேர்விலே பெறுகின்ற மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 517, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

517—

வெளிநாடுகளுக்குப் பழங்களை ஏற்றுமதி செய்தல்.

*16758—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ?

(ஆ) எந்தெந்த நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன ?

(இ) எந்தெந்த வகையான பழங்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகள் பற்றிய புள்ளி விபரங்கள் சரிவரக் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் உரிய புள்ளி விபரங்கள் சேகரிக்க பல்வேறு நிறுவனங்களிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விபரங்கள் சேகரிக்கப்பட்டபின் உரிய பதில் அளிக்கப்படும்.

[1993 ஏப்ரல் 2

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ரிப்போர்ட்டும் கிடைக்கவில்லை என்று சொன்னாலும் கூட, இப்போது எந்தெந்த வெரைட்டி பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன, அதன் மூலம், எவ்வளவு கோடி ரூபாய் அந்நியச் செலாவணியாக வந்து கொண்டிருக்கிறது என்ற இந்த விவரங்களையாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி என்பது மத்திய அரசின் கட்டுப் பாட்டில் உள்ள ஒன்றாகும். ஏற்றுமதியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் விவரங்கள் இந்திய நாடு முழுவதற்கும் தேசிய தோட்டக்கலை போர்டில் உள்ளது. மாநில வாரியாக இல்லை. நான் அறிந்த வரையில், தமிழகத்தில், தர்மபுரி மாவட்டத் திலிருந்து மாம்பழமும், மதுரையிலிருந்து திராட்சையும், திருச்சியிலிருந்து வாழையும், திருநெல்வேலியிலிருந்து காய் கறியும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி மாவட்டத்திலே மாம்பழம் அதிகமாக உற்பத்தியாகிறது. இதற்கு வெளிநாடுகளில் ஏகப் பட்ட கிராக்கி இருக்கிற காரணத்தால்,—இங்கேயிருந்து செல்ல கன்டெயினர் கிடைப்பதில்லை. பம்பாயிலிருந்து கல்ப் நாடு களுக்கு எல்லாம் நிறைய ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங் கிருந்து போவதற்கு ஏர் கன்டிசன் கன்டெயினர் கிடைக்காத சூழ்நிலையை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிந்து, அதை ஏற்றுமதி செய்வதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில், துறையின் மூலமாக ஏதா வது ஊக்குவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக் கலைப் பயிர்களான, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஒன்றிணைந்து ஒரு சங்கத்தை உருவாக்கி, அந்தச் சங்கத்தின் மூலமாக தங்களுடைய விளைபொருட்களை பக்கத்தில் உள்ள மாநிலத்தினுடைய தலைநகரமாக இருந்தாலும் சரி, அல்லது பிற மாநிலங்களினுடைய தலைநகரங்களாக இருந்தாலும் சரி, அங்கே கொண்டு செல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் களுக்கு வேண்டிய ஊர்திகள், லாரிகள், வேன்கள் வழங்கு வதற்கு அரசாங்கம் மானிய விலையில் உதவித் தொகை வழங்கு கின்ற திட்டத்தை ஏற்கனவே பேரவையிலே அறிவித்திருக் கிறேன்.

1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்வதில் கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் பெரும் பங்கு வகிக்கிறது. அண்மையிலே கூட, மத்திய அரசு கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் நிறுவுவதற்கு பல்வேறு மானியத் தொகைகளை வழங்கி வருகிறது. உங்கள் மூலமாக அமைச்சரிடத்திலிருந்து நான் அறிய விரும்புவது, மாநிலத்திலே எந்தந்த இடங்களிலே இது போன்ற கோல்ட் ஸ்டோரேஜ் பிளான்ட் இருக்கிறது. அப்படி இல்லை என்றால், எதிர்காலத்தில் அமைக்கின்ற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் போது விரிவான பதிலை எடுத்து வைத்தேன். தோட்டக்கலை விவசாயம் செய்யக் கூடிய விவசாயிகள், தாங்கள் உறபத்தி செய்யக்கூடிய பழங்களாக இருந்தாலும் சரி, காய்கறிகளாக இருந்தாலும் சரி, அவைகளைக் குளிர் பதன அறையிலே வைத்து பதப்படுத்தி, வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் ஏற்ற தொகை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அந்தத் திட்டத்தை அன்று அறிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அன்று அவைக்கு வரவில்லை. எனவே, அவர்களுக்கு, தெரிவதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே வசிப்பவர்களுக்கு காய்கறி, பழங்கள் கிடைக்கக் கூடிய அளவிலே, தரமான பழங்கள் கிடைக்க வேண்டிய அளவிலே அரசு ஒரு விரிவான திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 518, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

518—

சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம்.

*9946—திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுகக் விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதா ?